5th September 1960]

District Development Council

*442 Q.—Sri S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டங்களுக்கு பத்திரிகை நிருபர்களை அனுமதிக்கும் விஷயமாக சர்க்கார் முடிவுக்கு வந்து விட்டார்களா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri S. M. ANNAMALAI : முன்பு இப்படிப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும்போது இது பரிசீலனையில் இருக்கிறது என்று சர்க்கார் பதில் அளித்திருக்கிறார்கள். அந்தப் பரிசீலனை செய்வதற்கு இவ்வளவு கால தாமதம் ஆவதற்கு காரணம் என்ன ? அதில் என்ன கஷ்டங்கள் இருக்கின்றன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஒவ்வொன்றுக்கும் விதிகள் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த டெவலப்மெண்ட் கவுன்சில் விஷயமாகவும் விதிகள் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய ட்ராப்ட் ரூல்ஸ் தயாராகி அவைகள் எல்லாம் பரிசீலனையில் இருந்து வருகிறது. கூடிய சீக்கிரம் அது வெளியிடப்படும்.

Sri C. NATARAJAN : சில மாவட்டங்களில் சர்க்காருடைய அனுமதி இல்லாமல் அங்கங்கு நடைபெறுகிற கூட்டங்களுக்கு பத்திரிகை நிருபர்களை வைத்துக்கொண்டு அவைகளை நடத்துகிறார்கள். அதைத் தடை செய்வதற்கு அவர்கள் வராமல் நிறுத்துவதற்கு அரசாங்கம் தடை செய்ய முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அது அங்கங்கே இருக்கிறவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்து இருக்கிறது. அனுமதிக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி அங்குள்ளவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அவர்களை அனுமதிப்பதில் பெரிய ஆட்சேபணை இருப்பதாகத் தெரியவில்லை.

Leasing of devasthanam lands to agriculturists

*443 Q.—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1959, 1960-ல் சேலம் டிவிஷன் இந்துமத அற நிலையப் பாதுகாப்பு போர்டுக்குச் சேர்ந்த கோவிலுக்கும், தேவஸ்தானங்களுக்கும் சொந்தமான எத்தனை ஏக்கரா நிலங்கள் ஏலத்தில் விடப்பட்டு விவசாயிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : 637·07 acres of dry lands and 45·62 acres of wet lands.

Community Development Schemes in North Arcot district

*444 Q.—Sri S. M. ANNAMALAI : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1955-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-வ தேதிய 640 நெ. சர்க்கார் உத்திரவுப்படி 1959-60-ம் ஆண்டில் வடாற்காடு மாவட்டம், போளூர், கலசபாக்க சமுதாய நலத் திட்டங்களில் அனுமதிக்கப்பட்ட வேலைகள் எத்தனை?

[5th September 1960

(ஆ) ஒவ்வொரு வேலைக்கும் முதலில் அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அவைகள் குறைக்கப்பட்டனவா ?

(ஈ) அப்படியானால், அதற்கான காரணங்கள் யாவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Under G.O. Ms. No. 640, dated 28th February 1955, fourteen works in Kalasapakkam Block and twenty-one works in Polur Block in North Arcot district were taken up for execution during 1959–60.

(*b*) A statement [a] containing the particulars such as name of the work, amount sanctioned, etc., is placed on the table of the House.

(*c*) In none of these cases has the sanctioned amount been reduced subsequently.

(*d*) Does not arise.

SRI S. M. ANNAMALAI: நான் கேட்டிருக்கக்கூடிய கேள்வி ஜி. ஓ. 640-ன்படி தேசிய அபிவிருத்தி வேலைகளுக்கு முதலில் Block Development Officer அனுமதி தந்து, அதன் பிறகு டெக்னிகல் சாங்க்ஷன் வாங்கலாம் என்று இருக்கிறது. அந்த ஜி. ஓ.-ப்படி சாதாரணமாக ஒவ்வொரு பி.டி.ஓ.-வும் ஏறத்தாழ இரண்டு ஆயிரம் ரூபாய்க்கு சாங்ஷன் செய்தால் ஆயிரம் அல்லது ஐந்நூறு ரூபாய்க்குத் தான் டெக்னிகல் சாங்ஷன் தரப்படுகிறது. அதனால் ஊராட்சி மன்றங்களில் அதிகப்படியான வேலை எடுத்து நடத்துவதற்கு முடியாமல் இருக்கிறார்கள். அப்படி இல்லாமல் B.D.O. சாங்ஷன் செய்த தொகையில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாமல் டெக்னிகல் சாங்ஷன் வாங்கிக்கொள்ளலாம் என்ற அளவில் சர்க்கார் உத்தரவு போடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது இருக்கக்கூடிய விதிகளின்படி எப்படி எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற முறைப்படி அவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். மற்றப்படி வேறு விஷயங்களைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. கனம் அங்கத்தினர் சொல்லக்கூடியவைகளை எழுதி அனுப்பினால் அதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

Groundnut cultivation

*445 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாகாணத்தில் 1959-60-ல் எத்தனை ஏக்கராக்களிலே வேர்க்கடலை பயிரிடப்பட்டது ?

(ஆ) வெளிநாடுகளுக்கு கடலெண்ணெய் ஏற்றுமதி செய்வதற்காக எத்தனை பேர்களுக்கு லைசென்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) எத்தனை டன் கடலெண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The cultivated area under groundnut crop in this State as per the final forecast report for the year 1959–60 was 18,56,100 acres.

(*b*) 120.

(*c*) 11,149 tons (from April 1959 to February 1960).

SRI P. G. MANICKAM : எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள கடலெலெண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது ? இவை எந்த எந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது ?

---

[a] Printed as Appendix V on page 117 infra.